# கற்பகம்
KATPAKAM திங்கள் இதழ்
விலை ரூபா 10/-


## குறளமுதம்-28

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தவரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-3 - அறத்துப்பால்-முனிவர் பெருமை**

**"நிறைமொழி மாந்தர் பெருமை நிலந்து மறை மொழி காட்டிவிடும்"**

*பயன் நிறைந்த சொற்களையுடைய துறவியாரின் பெருமையை, நிலவுலகத்தில் அவர் ஆணையாகச் சொல்லிய மந்திரங் களே கண்கூடாகக் காட்டிவிடும்.*


மலர்-03 பெப்ரவரி-2010 இதழ்-28


# சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத்திட்ட கலந்துரையாடல்!

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர் களுக்கும், அங்கத்தவர்களுக்குமான சுயதொழில் ஓய்வூதியத் திட்டம் தொடர் பான கலந்துரையாடல் ஒன்று வட மாகாண பனை தென்னை வள அபிவி ருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் சமாச பொதுமுாகமையா ளர் ஜே.பி.குணரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் ப.தெ.வ.அ. கூ.சங்கங்களின் தலைவர்கள். பொதுமுகாமையாளர்கள், கணக்கா ளர்கள், கல்வி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலின்போது இலங்கை சமூக பாதுகாப்புச் சபை யினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாதாந்த ஓய்வூதியம் சம்பந் தமாக சமூகப் பாதுகாப்புச் சபையின்


(2ம் பக்கம் பார்க்க)




## பனஞ்சாற்று உற்பத்திப் பயிற்சி!

பனை அபிவிருத்திச்சபை நெடுந் தீவுப் பிரதேசத்தில் பனையில் ஏறி பனஞ்சாறு பெறுவது தொடர்பாகவும் அதிலிருந்து உற்பத்திகளை மேற் கொள்வது தொடர்பாகவும் பயிற்சி நெறி ஒன்றை ஆரம்பிப்பதற்கான நட வடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அச்செய்திக்குறிப்பில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

பொதுவாக கள் பெறப்படுகின்றது. இதிலிருந்து சில மேலதிக தொழில்நுட்ப முறை மூலம் பதநீர் பெறப்படுகின்றது. இத்தொழில்நுட்பமுறை தொடர்பான பயிற்சி நெறியே நெடுந்தீவில் ஆரம்பிக்க உள்ளோம். இதன்மூலம் பதநீர் தொடர்பான பனை வெல்லம், கல்லாக்காரம், பனம்பாணி போன்ற வற்றை அதிகமாக உற்பத்தி செய்ய முடியும். குறிப்பிட்ட பனம் உணவுப் பொருட்களுக்கு சந்தைவாய்ப்பு மிக அதிகமாக காணப்படுவதால் கூடிய


(2ம் பக்கம் பார்க்க)




## இலகு கடன்திட்டக் கலந்துரையாடல்!

சுயதொழில் இலகு கடன் திட் டம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களின் சமாச மண்டபத்தில் சமாச உபதலைவர் க.மெய்யழகன் தலை மையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பனை தென்னை வ.அ.கூ.சங்கங்கள், கொத் தணிகளின் பொதுமுகாமையாளர்கள், கணக்காளர்கள், கல்வி உத்தியோ கத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் சுன்னாகம் வர்த்தக வங்கி முகாமை யாளர் என்.புலேந்திரா, கொழும்பு வர்த்தக வங்கி முகாமையாளர் ரவீந்திரா ஆகியோர் வடக்கின் வசந் தம் திட்டத்தின் கீழான சுயதொழில் இலகு கடன் திட்டம் தொடர்பான விளக்கங்களை அளித்தார்கள்.

**"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"**

**சிந்தனைத்துளி**

" சுதந்திரமானவனாக இரு, எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே!

--சுவாமி விவேகானந்தர்--

## கற்பகக்கரு

### பனஞ்சாற்று உற்பத்தி பயிற்சி!

பனந்தொழில் வல்லுநர்கள் நிறைந்த யாழ். மாவட்டத்தில் அவர்களின் அடிப்படை வாழ்வாதார பொருளாதார முயற்சிகளை மேம்படுத்தும் உன்னத நோக்குடன் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என்பன செயற்பட்டு வருகின்றன.

இத்தகைய கூட்டுறவு நிறுவனங்களைத் தவிர பனை அபிவிருத்திச் சபை பனை வளத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய சகல உற்பத்திப் பொருட்களையும் செய்வதில் அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. பனை வளம் தொடர்பான பலதரப்பட்ட பயிற்சி நெறிகளை பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டு வருவது யாவரும் அறிந்த விடயமாகும்.

இந்த வகையில் பனை அபிவிருத்திச் சபை நெடுந்தீவுப் பிரதேசத்தை தெரிவு செய்து அங்குள்ள பனைகளிலிருந்து பெறக்கூடிய பனஞ்சாறு முதல் பனை வெல்லம், கல்லாக்காரம், பனம்பாணி போன்றவற்றையும் அதிகளவு உற்பத்தி செய்யக்கூடிய வகையில் திட்டங்கள் தயாரித்து செயற்படுத்த உள்ளது.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள பனைகளில் ஏறி பனஞ்சாறு பெறுவது சம்பந்தமாகவும் அதிலிருந்து செய்யக் கூடிய உற்பத்திகளை மேற்கொள்வது சம்பந்தமான பயிற்சி நெறி ஒன்றை ஆரம்பிப்பதற்கு இச்சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பனை வளத்திலிருந்து பொதுவாக பெறப்படும் கள்ளிலிருந்து அதி உச்ச தொழில்நுட்ப முறைகள் மூலம் பெறப்படும் பனை வெல்லம், கல்லாக்காரம், பனம்பாணி போன்றவற்றை உற்பத்தி செய்வது சம்பந்தமாகவும் அவற்றுக்கு சந்தைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்து அதிகளவு வருமானத்தை பெறக்கூடிய வகையிலான பயிற்சி நெறியை இளைஞர்களுக்கு வழங்குவதற்கு உத்தேசித்துள்ளமை வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

பனை அபிவிருத்திச் சபையின் இப் பயிற்சி நெறியை திருப்திகரமாக மேற்கொள்வதற்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என்பன ஒத்துழைப்பு வழங்க வேண்டும். 25 பயிற்சியாளர்களை உள்ளடக்கிய இப்பயிற்சிக்கு தேவையான பயிற்சியாளர்களை இத்தொழில்சார்ந்த கூட்டுறவு நிறுவனங்கள் தெரிவுசெய்து பனை அபிவிருத்திச் சபையிடம் அவர்களை கையளிக்க வேண்டும்.

மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து குறைந்தது இரண்டு இளைஞர்களையாவது இப்பயிற்சி நெறிக்கு அவை அனுப்பி வைக்க வேண்டும். புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி பனஞ்சாற்றை உற்பத்தி செய்யும் இப்பயிற்சி நெறிக்கு துடிப்புள்ள இளைஞர்களே மிகவும் பொருத்தமானவர்கள் ஆகும். பழைய மரபு முறைகளை விடுத்து, உடலுக்கு வருத்தம் கொடுக்காமல் பனை மரத்தில பொருத்தப்பட்ட ஏணி ஒன்றின் மூலம் ஏறி கள் உற்பத்தியை மேற்கொள்வதற்குரிய வசதிகளை சபை செய்துள்ளமை வியக்கத்தக்க ஒரு செயலாகும்.

சபையின் இத்திட்டத்திற்கு சங்கங்கள் ஒத்துழைப்பு வழங்கி ஆதரவு வழங்குவார்களேயானால் பழைய மரபு முறைகள் ஒழிக்கப்பட்டு புதியதொரு சகாப்தத்தில் பனந்தொழில் வல்லுநர்கள் காலடி வைப்பார்களென கற்பகம் எதிர்பார்க்கிறது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

## வடமாகாண கூட்டுறவு ஊழியர்களுக்கான பொது விடுமுறை தினங்கள் அறிவிப்பு!

கூட்டுறவு ஊழியர்களுக்குரிய 2010ம் ஆண்டுக்கான பொதுவிடுமுறை தினங்கள் குறித்து வடமாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும் வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு செயலாளர் பொ.வாகீசன் சுற்று நிருபம் 17/2010ன் மூலம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1972ம் ஆண்டின் 12ம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழ சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட 169/8 ஆம் இலக்க 1981.12.01ம் திகதியில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு ஒழுங்கு விதியின் 67வது பிரிவிற்கு இணங்க கூட்டுறவு ஊழியர்களுக்குரியதான பொதுவிடுமுறை தினங்கள் என்பது கடை அலுவலகச் சிப்பந்திகள் சட்டத்தின் கீழ் கௌரவ தொழில் அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்பட்ட தினங்களேயாகும். இதற்கிணங்க 2010ம் வருடத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள விடுமுறை நாட்கள் கீழ் குறிப்பிட்டவாறு இருக்க வேண்டுமென ஆணைக்குழு கட்டளைப்படி அறியத்தரப்படுகின்றது.

- தைப்பொங்கல் தினம்
- தேசிய தினம்
- சிங்கள/தமிழ் புதுவருடத்திற்கு முன்தினம்
- சிங்கள/தமிழ் புதுவருட தினம்
- மே தினம்
- வெசாக் பூரணை தினத்திற்கு மறுதினம்
- மீலாத்துன் நபி (நபிகள் நாயகம் அவர்களின் பிறந்த தினம்)
- நத்தார் தினம்
- ஒவ்வொரு மாதங்களிலும் வரும் பூரணை தினம்
- கூட்டுறவு அபிவிருத்தி ஆனையாளரால் கூட்டுறவாளர்களின் தினமாக பிரகடனப்படுத்தப்படும் தினம்.

மேற்குறிப்பிட்ட விடுமுறை நாட்கள் ஏதாவது சங்கத்தின் வாராந்தம் அளிக்கப்படும் விடுமுறை நாட்களுக்குள் உட்படுத்தப்பட்டிருக்கும் பட்சத்தில் அதற்குப் பதிலாக பதில் விடுமுறையோ அல்லது சம்பளமாகவோ ஊழியரினதும், சங்க நிர்வாகத்தினதும் இணக்கத்துடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அடுத்தப்படியாக வருகின்ற நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பனஞ்சாற்று உற்பத்தி..................** 1ம் பக்க தொடர்ச்சி

வருமானத்தை பெறக்கூடியதாக இருக்கும்.

பயிற்சியின்போது பயிற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புப் படியும், உபகரணத் தொகுதியும் வழங்கப்படும். இப்பயிற்சிக்கு இருபத்தைந்து (25) பயிற்சியாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர். இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தலைவர், பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலக கட்டடம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இப்பயிற்சியில் கலந்துகொள்ளவிருக்கும் பயிற்சியாளர்கள் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்களாகவும் உடல் ஆரோக்கியம் உள்ளவராகவும் குறைந்தது தரம் 8ல் சித்தியடைந்திருத்தல் வேண்டுமெனவும் அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சமூக..........** 1ம் பக்க தொடர்ச்சி

யாழ்.மாவட்ட இணைப்பாளர் திரு. பிரதீபன், வெளிக்கள உத்தியோகத்தர் திரு.சூரியகாந் ஆகியோர் கருத்துரைகளை வழங்கி, மாதாந்த ஓய்வூதியத் திட்டம் பணியாளர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும் சிறந்த ஒரு திட்டமென வலியுறுத்திக் கூறினார்கள். இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களுக்கு இவ் ஓய்வூதியத் திட்டம் தொடர்பான கையேடுகளும் வழங்கப்பட்டன.

பலவிதமான எழுத்து வேலைகள் மற்றும் ஒரு அமைப்பின் நோக்கத்தை எய்தும் பொருட்டு சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் தேவையான சாதனங்களைப் பயன்படுத்தி அமைப்பின் வேலைகளை மேற்கொள்ளும் இடம் அலுவலகம் ஆகும்.

# அலுவலக முகாமைத்துவம்

# OFFICE MANAGEMENT

V.மாலினி, மானிப்பாய்

அலுவலகத்தின் முக்கிய கடமைகளான பல பிரிவுகளுக்கிடையே தொடர்பினை ஏற்படுத்தல், பொதுமக்களுக்கு அதாவது அங்கத்தவர்களுக்கு சேவைகளை அளித்தல், நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டு அமைப்பின் குறிக்கோளை நிறைவு செய்யும் பொருட்டு திட்டமிடல், நிதி தொடர்பாக நடவடிக்கையினை மேற்கொள்ளல் ஆகும். சகலவிதமான பதிவுகளை செய்வதும், பாதுகாப்பதும் மற்றும் இத்துறைசார்ந்த நிறுவனங்கள், வெளிநபர்களுடனான தொடர்பும், செய்திகள் பரிமாற்றம், தகவல் பெறல் ஆகியன நடைபெறும்.

பெறப்பட்ட தகவல்களைப் பாதுகாத்து, பயன்படுத்துதற்குரிய நடவடிக்கைகளை அலுவலகம் மேற்கொள்ளும். தேவைப்படும்போது முகாமைக்கு தகவல் வழங்குதல் அடிப்படைப் பணிகளில் ஒன்றாகும். தகவல்கள் வாய்மொழி மூலமாகவும், எழுத்து வடிவத்திலும் அமையும். தேவையான தகவல்களை முகாமை பாதுகாத்தல் வேண்டும். சில தகவல்கள் இலகுவில் பெறமுடியாது. ஆகவே கிடைக்கும் முக்கிய தகவல்களை ஒழுங்குபடுத்தி சேகரித்தல் அலுவலக முகாமைத்துவத்தின் பணியாகும்.

தகவல்களிலிருந்து தீர்மானம் எடுத்தல் என்பது கிடைத்த தகவல்களிலிருந்து முகாமைச் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு தேவையான தீர்மானங்களை முகாமை சரியாக எடுப்பதற்கு உதவுகிறது.

பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்கள் தமது அலுவலகத்தின் முக்கியத்துவத்தினை உணர்ந்து செயற்பட வேண்டிய தேவை அவசியம் உண்டு. காரணம் இது ஒரு கூட்டுறவு அமைப்பு. இது ஒரு சமூக நிறுவனமும் கூட. எனவே சமூகத்தில் நன்மதிப்புப் பெறவேண்டுமானால் சங்கத்தின் அலுவலகம் சிறப்பாக செயற்பட வேண்டும். அங்கு பணிபுரியும் பணியாளர்கள் வருபவர்களிடம் பண்புடன் நடந்து கொள்வதோடு, நேர்மையுடனும், விசுவாசத்துடனும் தமது பணிகளை செம்மையாகவும், சிக்கனமாகவும் (செலவு விடயங்கள், காகிதாதி பாவனை) அலுவலகம் இயங்க வேண்டும். ஒரு அலுவலகமானது அது சார்ந்த நிறுவனத்தின் மூளை என வர்ணிக்கப்படுகிறது. அலுவலகமானது ஒரு தகவல் சேகரிப்பு நிலையமாக, ஓர் இடைநிலையாளராக, ஒரு ஒருங்கிணைப்பாளராக, ஒரு சேவையாளராக, ஒரு கட்டுப்பாட்டு மையமாகச் செயற்படுகின்றது.

ஓர் அலுவலகத்தின் இடத்தினை அதாவது அமைவிடத்தை தெரிவுசெய்யும்போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அனைவருடனும் தொடர்புகளைப் பேணக்கூடியதான இடத்தில் அமையவேண்டும். எதிர்காலத் தேவைகள் நிறைவுபெறவும் காலத்திற்கு ஏற்ப மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியதாகவும், பணியாற்றும் பணியாளர்கள் வசதியாக இருந்து பணியாற்றக்கூடியதாகவும், இடவசதி, காற்றோட்டம், மற்றும் அங்கத்தவர், அவர் சார்ந்தவர்கள், பொதுமக்கள், ஏனைய இந்நிறுவனங்களுடன் தொடர்புபட்ட திணைக்கள உத்தியோகத்தர்கள் வருகை தரும்போது அவர்களை வரவேற்கக் கூடிய வரவேற்புக்கூடம், இல்லக வசதி, உரிய பணியாளர்களின் பெயர்ப் பட்டியல், வரைபடம், குடிநீர் வசதி, மலசலகூட வசதி, வெளிச்சம் போன்ற வசதிகளுடன் கிட்டிய தூரத்தில் வங்கிகள், தபாலகங்கள், சந்தை, பஸ்தரிப்பு நிலையம், மற்றும் போக்குவரத்து வசதி, தகவல் தொழில்நுட்ப வசதி, மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் கொண்டதான பகுதியின் மத்தியில் அமைந்திருப்பதுடன், மக்கள் செறிவாக வாழும் பகுதியாகவும் இருத்தல் வேண்டும். மேற்படி வசதிகளைப் பெற்றுள்ள அலுவலகமே சிறப்பான அலுவலகமாக இருக்கும்.

எமது பனைவள நிறுவன அலுவலக முகாமைத்துவம் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டியது மிகவும் காலத்தின் தேவையாகும். காரணம் 1972ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இப்பனைச் சங்கங்கள் அப்போது இருந்த பொருளாதார வளத்தினை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு அலுவலகமாகும். தற்போது இவ்வகைச் சங்கங்கள் நிதிவளம் பெருகியதால் தமது வளர்ச்சிக்கு ஏற்ப பல மடங்குகள் விஸ்தீரணமான கட்டடங்களை அமைத்து செயற்பட்டு வருகின்றன. இனிமேலும் புதிதாக அலுவலகங்கள் அமைக்கவுள்ள சங்கங்கள் மேலே கூறப்பட்ட விதிமுறைகளைக் கவனத்தில் கொண்டு அமைப்பது ஒரு சிறப்பான அலுவலக முகாமைத்துவத்தினை மேற்கொள்ள உதவும்.

-வளரும்-

# நம் இனிய தமிழ்மொழியே உன் நிலை.....?

காலத்தே முன் தோன்றி முதிர்ந்ததெங்கள் தமிழ் மொழி. ஆதிகால மனிதன் உணர்வு என்பதை வெறும் சைகை மூலமே வெளிக்காட்டினான். அவன் வெட்கமாகட்டும், மழந் தொடுங்கும் துன்பமாகட்டும், ஏன் சீறி எழும் கோபமாகட்டும் அனைத்தையுமே சைகை மூலமே தெரிவித்துக் கொண்டான். அறிவு வளர்ச்சிக்கேற்பவும், காலத்தின் சுழற்சியினாலும் மனிதன் முன்னேற்றமடையத் தொடங்கினான். மனிதனின் முதல் வளர்ச்சி மொழியைக் கையாண்டதென்றால் அது மிகை யில்லை.

மனிதனின் அறிவு வளர்ச்சியால் நூற்றுக் கணக்கான மொழிகள் தோன்றின. காலச் சுழற்சியால் கண்டுபிடிக்கப்பட்ட மொழிகள் அதே காலச்சுழற்சியால் மெல்ல மெல்ல தலையைக் கவிழ்த்து மறைய ஆரம்பித்தன. சில மொழிகள் பேச்சு வழக்கின்றி எழுத்தில் மட்டுமே காணப்படுகின்றன. ஆனால் பல்வேறு மொழிகள் ஏட்டிலுமின்றி, பேச்சிலுமின்றி என்றோ ஒருநாள் தோன்றியது போலவே என்றோ ஒருநாள் மறைந்து விட்டது என்ற செய்தி பேச்சில் மட்டுமே உள்ளது. ஆனால் உலகெங்கும் வாழ்ந்திடும் அநேக மானோரின் நாவில் தவழ்ந்தாடும் நம் இனிய தாய் மொழி தமிழ்மொழியோ என்றும் நிலைத்திருக்கிறது.

எம் தமிழ் மொழியின் இனிமை கூற இவ்வுலகில் உள்ள காலம் போதாது. சில மொழிகளோ நாட்டுப்புறப் பெண்கள் போல அளவுக்கதிகமாக நாண, தமிழ் மொழியோ அளவோடும், பண்போடும் நாணி நிற்கும் நங்கையாய் தோன்றுகின்றது.

"யாம் அறிந்த மொழிகளுள்ளே தமிழ்மொழிபோல் இனிதாவதொன்றும் காணோம்" என்றார் தமிழ்ப் பெருங்கவிஞர். நூற்றுக்கணக்கான வெண்பாக்கள், ஆயிரக் கணக்கான கவிதைகள் என்பவற்றைக் கொண்டது தமிழ்மொழி. எத்தனை ஆயிரம் கவிஞர்களை மொத்தமாக இந்த உலகிற்கு தந்தது. இன்றும் தந்துகொண்டிருக்கிறது. இனியும் தரும் என்பதில் ஐயமில்லை. தமிழ் அமுதம் போன்றது. அதனால்தான் போலும் "தமிழுக்கு அமுதென்று பெயர்.." என்று கவிஞர் ஒருவர் பாடினார்.

இவ்வாறாக அளவிடமுடியாத பெருமையும், இனிமையும் பொருந்திய நம் "செந்தமிழ்" இன்று மெல்ல மெல்ல வேர் அறுந்து சாயப்போகின்றதோ? என்ற அச்சம் பல அறிஞர்கள் மனதில் ஏற்படுகின்றது. ஏனெனில் அந்நிய மொழிகள் மீது தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள நாட்டம், ஏன் மோகம் என்றுகூடக் கூறலாம். இந்த மோகம் தாய் மொழியாகிய தமிழ்மொழியை புறந் தள்ளும் அளவிற்கு வளர்ந்து வருவது வேதனைக்குரியது. வேற்று மொழிகளை அறிந்து கொள்வதும், அதில் தமது புலமையை வளர்த்துக்கொள்வதும் விரும்பத்தக்கதே. அதில் தவறொன்றுமில்லை. ஆனால் ஏற்கனவே தமிழ் மொழியில் கலந்துள்ள சில அந்நிய மொழிகளின் ஊடுருவல்களை அகற்றுவற்கு சில தமிழ் ஆர்வலர்கள் முயற்சித்து வருகின்ற வேளையில் நம் இளைய சமுதாயம் தமிழ் மொழியில் பேசுவதே ஏதோ அவமானம் போல் கருதுவது நம் தமிழ்மொழியின் எதிர்காலம் பற்றிய அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

எனவே "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த மொழி" என்று பெருமைபெற்ற நம் தாய்மொழியாகிய தமிழ்மொழியை அதன் பெருமையும் இனிமையும் சற்றும் குறையா வண்ணம் பாதுகாக்க வேண்டியது தமிழராகிய நம் அனைவரினதும் கடமையாகும்.

"வாழ்க தமிழ், வளர்க தமிழ்"

# உங்களைப் பாதுகாத்துக்கொள்ள சில ஆலோசனைகள்!

### முக அழகை அதிகரிக்க வேண்டுமா?

பனை, தென்னை ஆகியன பூலோக கற்பக தருக்கள் என்பார்கள். அந்தக் கற்பகதருவில் ஒன்றான தென்னையின் காய் நங்கையரை அழகாக்குவதிலும் பங்கெடுக்கின்றது.

❊ சோர்வாக இருக்கும் முகத்திற்கு வழுக்கைத் தேங்காயை அரைத்து, அதனோடு சிறிது இளநீர் கலந்து முகத்துக்குக் கீழிருந்து மேலாகப் பூசி காய்ந்ததும் கழுவிடல் வேண்டும். தினமும் இவ்வாறு செய்து வந்தால் மாசு, மறுவற்ற பளிங்குபோன்ற முகத்தை பெறலாம்.

❊ வெயில் காரணமாக முகத்தில் வரும் கருமையை விரட்டியடிக்கும் வழி இதோ!

தேங்காய்ப்பால் 2 தேக்கரண்டி, கடலை மாவு ஒரு தேக்கரண்டி இரண்டையும் எடுத்து கலந்து பசையாக்கி முகத்தில் போட்டு காய்ந்த பின்னர் கழுவ வேண்டும். வாரம் ஒருமுறை இப்படிச் செய்துவர முகம் பிரகாசமாகும். இந்தக் கலவையில் கடலை மாவுக்கு பதிலாக ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்து கண் புருவத்தில் படாமல் முகம், கழுத்துப் பகுதிகளில் தேய்த்து 15 நிமிடங்கள் கழித்துக் கழுவுதல் வேண்டும். இதன்மூலம் முகத்தில் வரும் கருமையை அகற்றலாம்.

### நோய் தீர்க்க சில கை மருத்துவம்!

❊ ஒரு சிலருக்கு கைகளின் பின்புறம் முழங்கைகளில் கறுப்பாக இருக்கும். இவர்கள் அதனை போக்க தினமும் எலுமிச்சம்பழ மூடியில் முழங்கைகளை பத்து நிமிடங்கள் தேய்த்து ஊறவைத்த பின்னர் கழுவி வரலாம். கைகளின் மேல்புறத்தில் வரும் வெண்படலத்தை அகற்ற தேங்காய் எண்ணெய் அல்லது ஒலிவ் எண்ணெய் தேய்த்து ஊறிய பின்னர் குளித்து வந்தால் மறைந்துவிடும். இவை தவிர உடலில் கொழுப்பு அதிகரிப்பதால் கைகளிலும் கொழுப்பு சேராதபடி அழகாக வைத்துக்கொள்ள முடியும்.

❊ தினமும் தேனுடன் எலுமிச்சைச்சாறு கலந்து குடித்து வந்தால் எதுவிதமான நோயும் அணுகமாட்டாது.

❊ கறிவேப்பிலை, தேங்காய், மிளகாய் மூன்றையும் சேர்த்து அரைத்து துவையலாக சாப்பிட்டால் நன்றாக பசி எடுக்கும்.

❊ வயிற்றுப்புண், வயிற்றுவலி, சூடு ஆகியவற்றைப் போக்க பச்சை வெந்தயத்தை தயிரில் போட்டு மென்று சாப்பிடவேண்டும்.

❊ சொறி, சிரங்கு, கடி ஆகிய நோய்களை தீர்க்க பாகற்காயை இடித்து சாறு பிழிந்து அதனை நோயுள்ள இடத்தில் தடவி வந்தால் நோய் மாறும்.

❊ காதுக்குத்து, காதுவலி ஏற்பட்டால் குப்பைமேனி இலையை கசாயமாக்கி 5 சொட்டு விட்டால் வலி மாறிவிடும்.

❊ திராட்சைப்பழம் தினமும் சாப்பிட்டுவர ஆஸ்துமா நோய் குணமடையும்.

❊ காலில் பித்தவெடிப்புக்கள் நீங்க எலுமிச்சம்பழத் தோலை அந்த இடத்தில் தேய்க்க குணமடையும்.

❊ தக்காளிப்பழம் சாப்பிட்டால் உடல் வரட்சி, மலச்சிக்கல், சிறுநீரகக் கோளாறு குணமடையும்.

❊ இளநீருடன் சிறிது தேன் கலந்து வெறும் வயிற்றில் தினமும் அருந்தி வந்தால் சலம் சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

### உதட்டுக்கு ஒரு குறிப்பு

மேலுதட்டையும் கீழுதட்டையும் சேர்த்து ஒன்றன்மீது ஒன்றாக அழுத்துங்கள். இந்த நிலையில் முப்பது நொடிகள் இருந்த பிறகு ரிலாக்ஸ் செய்து பயிற்சியைத் தொடரலாம். இந்தப் பயிற்சியால் உதட்டுக்கு கூடுதல் கவர்ச்சி கிடைக்கும். தடிப்பாக இருக்கும் உதட்டுக்கு நல்ல வடிவம் கிடைக்கும். மேலும் பசியை ஓரளவுக்கு கட்டுப்படுத்தவும் இது உதவுகிறது.

# சிறந்த ஔடதம்

அன்பை வளர்த்துவிடு
அல்லல் அகன்று விடும்
அறிவை பெருக்கி விடு
அறியாமை அகன்று விடும்
ஆற்றலைப் பெருக்கிவிடு
ஆறாம் அறிவாம்
ஆற்றல்மிகு பகுத்தறிவு வளர்ந்துவிடும்
இதயத்தை தூய்மையாக்கி விடு
இன்னல்கள் இல்லாதொழியும்
ஈன்றவளை மறவாதே
ஈகையை விலக்காதே
உண்மையே பேசு
உன்னதமான வாழ்வே அமையும்
ஊக்கத்தை கைவிடாதே
ஊதாரியாய் திரியாதே
ஊருக்கு உதவு
எளிமையாக வாழ்
எதையும் எனதென எண்ணாதே
எல்லோருக்கும் பொதுவென எண்
எவர் எதுசொன்னாலும் ஏற்றுக்கொள்
ஏமாற்றாதே எவரையும்
ஏமாறாதே எவரிடமும்
ஐந்தில் வளைத்துவிடு முதலில்
ஐம்பதிலும் வளையலாம் எளிதில்
ஒற்றுமையாக வாழ்
ஒருவரையும் சினக்காதே
ஓதுவதை ஒருநாளும் மறவாதே
ஓர் எறும்பும் உயிரென உணர்
ஔவை சொன்னயாவும் படி
அஃதே உனது அறியாமை நோய்க்கு
சிறந்த ஔடதம்!

-கவிஞன்-

கவியின்பம்

# வெள்ளை மனம் கொண்ட பிள்ளை!

பிள்ளைப் பருவத்திலே அவளை
பேணி வளர்த்து விட்டால்
வெள்ளை மனம் கொண்ட
பிள்ளையென வளர்ந்திடுவாள்
கன்னிப் பருவம் வந்ததும்
காவல் காத்து பாதுகாத்து
கண்ணை இமை காப்பதுபோல்
கவனம் செலுத்தி வந்தால்
கவலை ஏதுமுண்டோ?
குன்னியின் கருணை உண்டு
உவகை பொங்க வைக்கும்
உள்ளம் அவளுக்குண்டு!
நிலையாய் நின்று வளர்ந்து
தலையில் இளநீர் தேங்காய்
குலை குலையாய் சுமந்து
நல்வாழ்வு தருவாள் நமக்கு
தென்னம் பிள்ளையாய் இருந்து
தென்னை மரமாயுயர்ந்து
தன்னை வருத்தி அவள்
தரும் பொருட்கள் தரமானவை!

-கே.எம்.தியாகராஜா-

# மூன்று எழுத்தில் வாழ்க்கை

உலகில் உள்ள **உயிர்**–மூன்றெழுத்து
உயிரை இயக்கும் **சக்தி** –மூன்றெழுத்து
சக்தியின் வடிவம் **அன்னை** – மூன்றெழுத்து
அன்னை காட்டும் **அன்பு** –மூன்றெழுத்து
அன்பை உயர்த்தும் **அறிவு** –மூன்றெழுத்து
அறிவை வளர்க்கும் **பள்ளி** –மூன்றெழுத்து
பள்ளியில் பயிலும் **கல்வி** –மூன்றெழுத்து
கல்வியின் பயனான **பதவி** –மூன்றெழுத்து
பதவியை அலங்கரிக்கும் **இளமை** –மூன்றெழுத்து
இளமை தரும் **மணம்** –மூன்றெழுத்து
மணத்தால் இணையும் **மனைவி** –மூன்றெழுத்து
மனைவியால் உருவாகும் **மழலை** –மூன்றெழுத்து
மழலைக்கு செலவாகும் **பணம்** –மூன்றெழுத்து
பணத்தினைத் தேடும் **கைகள்** –மூன்றெழுத்து
கைகள் சோரும் **முதுமை** –மூன்றெழுத்து
முதுமையின் பின் **முடிவு** –மூன்றெழுத்து
முடிவின் பின் தேவைப்படும் **பெட்டி** –மூன்றெழுத்து
பெட்டியில் அடக்கும் **பிணம்** –மூன்றெழுத்து
பிணம் எடுத்துச் செல்லும் **ஊர்தி** –மூன்றெழுத்து
ஊர்தி செல்லும் **சுடலை** –மூன்றெழுத்து
சுடலையில் வைக்கும் **கொள்ளி** –மூன்றெழுத்து
கொள்ளியில் எரிந்த **அஸ்தி** –மூன்றெழுத்து
அஸ்தி கரையும் **கடல்**–மூன்றெழுத்து!

பா.தர்சன்

# சிந்திக்கச் சில......



- சத்தியமே வெற்றிதரும், சத்தியத்தை ஏணியாக உறுதியுடன் பற்றிக்கொள்ளுங்கள்.
- உங்களிடத்தில் வேலை பார்த்தவனின் வியர்வை உலர்வதற்கு முன் அவன் கூலியை கொடுத்துவிடுங்கள்!
- சுகத்தை கண்டு மகிழாதீர்கள், அது துக்கத்தின் ஒருவித அலங்காரம்.
- அழுதுகொண்டே உலகத்திற்கு வருகிறீர்கள், சிரித்துக் கொண்டே அதனைவிட்டுச் செல்லும்படியாக வாழுங்கள்.
- பிறர் உன்னை இகழினும், தூற்றினும் உன் அமைதியை குலையவிடாதே!
- துன்பங்களை உன்னிடத்தில் குடி வைக்காதே, அது இறுதியில் உன்னை அழித்துவிடும்.
- நீ மற்றவர்களுக்கு உதவி செய்யாதபட்சத்தில் மற்றவர்களிடமிருந்து உதவியை எதிர்பார்ப்பது நியாயமில்லை.
- கடந்த காலத்தை பற்றி கவலைப்படாமல் எதிர்காலத்தை பற்றி ஏங்காமல் கையில் இருக்கும் நிகழ்காலக் காரியத்தில் கவனம் செலுத்துங்கள்!

# கூட்டுறவுப் பணியாளர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள்!

# ACTIVITIES OF CO-OPERATIVE EMPLOYEES BEHAVIORS

சென்ற இதழ் தொடர்ச்சி

திரு.இ.சுப்பிரமணியம் -B.A.

ஆதலால்தான் 1972ம் ஆண்டு 12ம் இலக்க கூ.ப.ஆணைக்குழுச் சட்டத்தின்கீழான ஒழுங்குவிதிகளின் பிரிவு 80ல் பணியாளர் ஒருவருக்கெதிராக சங்கமொன்று ஒழுக்காற்று விசாரணையொன்றை மேற்கொள்ள எண்ணுமிடத்து நெறியாளர் குழு **"தேவைப்படுமிடத்து"** (Necessity Inquiery) ஆரம்ப விசாரணையை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது. தேவை ஏற்படாவிட்டால் ஆரம்ப விசாரணையைக் கைவிடலாம். ஒரு சங்கத்தில் பணியாளரொருவர் புரிந்த குற்றங்களைப் பூரணமாக நிரூபிக்கக் கூடிய சான்றாவணங்களும், சாட்சியங்களும் போதுமானமட்டில் சரியாகவும், ஒழுங்காகவும் இருந்தால் விசாரணையைக் கைவிடலாம். இதனைத்தான் **"தேவைப்படுமிடத்து"** என்ற சொற்றொடர் குறித்து நிற்கின்றது. (Necessity)

பணியாளர் புரிந்த குற்றம் கண்டுபிடிக்கப்பட்டதும் ஆரம்ப விசாரணை நடத்த முன்னரோ, அல்லது ஆரம்ப விசாரணை முடிவடைந்த பின்னரோ குற்றம் புரிந்த பணியாளரை இடைநிறுத்தம் செய்தலென்பது, குற்றம் புரிந்த பணியாளர் புரிந்துள்ள குற்றத்தின் தன்மையைப் பொறுத்தே அமையும். சிறு குற்றம் புரிந்தவர் குற்றத்தை ஒப்பக்கொண்டு மன்னிப்புக் கோரினால் அவருக்கு சிறுகுற்றமொன்றை விதித்து பிரச்சினை முடிவுக்குக் கொணரலாம். சிறு குற்றங்களைப் புரிந்த பணியாளர் குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுத்தால் விசாரணைகள் நடத்தப்பட்டு அவர் புரிந்த குற்றங்கள் நிரூபிக்கப்பட வேண்டும். பாரிய பொருள் மோசடியையோ, நிதி மோசடியையோ புரிந்த பணியாளரை ஆரம்ப விசாரணை முடிவடையும்வரை வேலை செய்ய அனுமதித்தால் அவர் வேலை செய்யும் காலப்பகுதியில் தான் புரிந்த குற்றங்களை நிரூபிக்க உதவக் கூடிய கணக்கேடுகளையும், ஆவணங்களையும் திருத்துதல், மாற்றுதல், மறைத்தல், அழித்தல், களவெடுத்தல் போன்ற தீய செயல்கள் மூலமும், சாட்சியங்களுடனும் அன்பாகப் பழகித் தன் பக்கம்சாரச் செய்தல் மூலமும், ஈர்த்தல் மூலமும் பலவீனப்படுத்திவிடுவார். ஆதலால் பாரிய குற்றச் செயல்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் நிறுவனத்தின் கணக்கேடுகளும், கணக்குப் பதிவுகளும், சான்றாவணங்களும் சீராக இருந்தால் குற்றம் கண்டு பிடிக்கப்பட்டதும் வேலை இடைநிறுத்தம் செய்யலாம்.

வேலை இடைநிறுத்தமென்பது பணியாளர்களைப் பொறுத்தவரை பாரதூரமான தண்டனையென்பதாலும், பணியாளர்களின் வாழ்வையும், அவர்களின் குடும்பத்தின் வாழ்வையும் முற்றாகப் பாதிக்குமென்பதினாலும், இச்செயல் ஏனைய சங்கத்தின் பணியாளரையும் அஞ்சிக்கச் செய்து அவர்களின் வேலைத் திறனைப் பாதிக்குமென்பதினாலும், குறித்த பணியாளர் புரிந்த குற்றங்களைப் பூரணமாக நிரூபிக்கக்கூடிய சான்றுகள் சங்கத்தில் இருந்தால் மட்டும் குற்றம் புரிந்த பணியாளர்களை இடைநிறுத்தம் செய்யலாம்.

கூட்டுறவுச் சங்கமொன்று தனது பணியாளரொருவரை இடைநிறுத்தம் செய்ததும் பின்வரும் விடயங்களை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கும், கூட்டுறவு பணியாளர் ஆணைக்குழுவுக்கும் தவறாது அனுப்பி வைக்க வேண்டும்.

- சங்கத்தின் பெயர்.
- இடைநிறுத்தம் செய்யப்பட்ட ஊழியரின் பெயர், பதவி, இடைநிறுத்தப்பட்ட திகதி.
- இடைநிறுத்தப்பட்டதற்கான காரணங்கள்.
- குற்றத்திற்கு சான்றாக உள்ள காரணிகளின் விபரங்கள்.
- விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒழுங்குகள்.
- குற்றவியல் நடவடிக்கை தொடர்பாக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் அது பற்றிய பூரணத்துவமான தகவல்கள் இணைக்கப்பட வேண்டும்.


**ஆரம்ப விசாரணை நடவடிக்கைகள்**
**Functions of Commencnement Inquiry**

கூட்டுறவுச் சங்கங்களின் நெறியாளர் குழுக்கள் தமது குழுவில் தீர்மானித்தே ஆரம்ப விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். சங்கத்தின் நிறைவேற்று மட்டத்திலுள்ள பணியாளரொருவரையோ அல்லது இளைப்பாறிய அரச, கூட்டுத்தாபன, கூட்டுறவு உத்தியோகத்தர்களையோ ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர்களாக கூட்டுறவுச் சங்க நெறியாளர்குழு நியமிக்கலாம். இவர்கள் கூ.ப.ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். எவர் விசாரணை நடத்துவதற்குப் பொருத்தமானவர் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் கூ.ப.ஆ.குழுவுக்குண்டு.

ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர் ஒருவராகவோ, பலராகவோ இருக்கலாம். பலரடங்கிய குழுவொன்றை ஆரம்ப விசாரணைக்குப் பொறுப்பாக நியமித்தால் நெறியாளர்குழு விசாரணைக் குழுவுக்கு ஒரு தலைவரையும் நியமிக்க வேண்டும். விசாரணைக்குழு பற்றியும், அதன் தலைவர் பற்றியுமுள்ள சகல விபரங்களும் கூ.அ.உ.ஆணையாளருக்கும், கூ.ப.ஆ.குழுவுக்கும் சங்கம் தவறாது அறிவிக்க வேண்டும்.

-வளரும்-

# நிகழ்வுகளின் நிழல்கள்!



கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது சங்கத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற பணியாளர்கள், மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், சிறுவர் சேமிப்பாளர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் விழாவினை அண்மையில் நடத்தியது. இந்நிகழ்வில் மா.கூ.அ.அலுவலர் திரு.பத்மகாந்தன் ஓய்வுபெற்ற பணியாளரான திரு.பி.டொமினிக் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், இந்நிகழ்வின் பிரதம விருந்தினரான யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.பொ.சிவலிங்கம் அவர்கள் முன்பள்ளி ஆசிரியை ஒருவருக்கு பரிசில் வழங்கி கௌரவிப்பதையும், மாணவன் ஒருவனுக்கு சங்கத்தின் செயலாளர் செ.செல்வராசா அவர்கள் பரிசில் வழங்குவதையும், மற்றும் விருந்தினர்கள், சங்க பணியாளர்கள், நிர்வாகிகள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரை மேலுள்ள படங்களில் காணலாம்.



வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சின்கீழ் செயற்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டக் கலந்துரையாடல் சமாசக் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்ட சங்கங்கள், கொத்தணிகளின் கணக்காளர்கள், கல்வி உத்தியோகத்தர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோரைப் படங்களில் காணலாம்.

# கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கௌரவிப்பு விழா!

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஓய்வுபெற்ற பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், சிறுவர் சேமிப்பாளர்களை கௌரவிக்கும் விழாவினை சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு அ.சின்னராசா தலைமையில் அண்மையில் நடத்தியது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.பொ.சிவலிங்கம் அவர்களும், கௌரவ விருந்தினர்களாக மா.கூ.அ.உத்தியோகத்தர் திரு. த.பத்மநாதன், தலைமை காரியாலய கூ.அ.உத்தியோகத்தர் திரு ஐ.நாகேஸ்வரன், கூ.அ.உத்தியோகத்தர் திரு.இ.சிறிதரன், கூ.அ.உத்தியோகத்தர் திரு.க.கமலநாதன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக சமாதான நீதவான் திரு கி.சின்னத்துரை (தாவடி), மற்றும் வடமாகாண பனை தென்னை வ.அ.கூ.ச.சமாச தலைவர், பொதுமுகாமையாளர், கல்வி உத்தியோகத்தர், வலிகாமம் பனை தென்னை வ.அ.கூ.ச. கொத்தணியின் தலைவர், பொதுமுகாமையாளர், கல்வி உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இவ்விழாவில், தொடர்ந்து இறைவணக்கம், மறைந்த உறுப்பினர்களுக்கான அஞ்சலி, கௌரவிப்பாளருக்கான மலர்மாலை அணிவித்தல், வரவேற்புரை, சிறப்பு விருந்தினர் உரை, கௌரவ விருந்தினர் உரை, பிரதம விருந்தினர் உரை, சிறுவர் சேமிப்பாளருக்கான பரிசில் வழங்கல், ஓய்வுபெற்ற பணியாளர் கௌரவிப்பு, முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு, பாடசாலை மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வுகளுடன் இறுதியில் செ.செல்வராசா அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

(படங்கள் 4ம் பக்கம்)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது!

யாழ்.பல்கலைக்கழகமும் வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசமும், சமாசத்தில் இணைந்துள்ள சங்கங்கள், கொத்தணிகளால் நடாத்தப்படுகின்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி ஒன்றை பங்குனி மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கவுள்ளனர்.

இப்பயிற்சி நெறியில் மேற்குறித்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தொடர்ச்சியாக 4 தினங்கள் பொருத்தமான பல்வேறு பயிற்சிகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் முன்பள்ளி ஆசிரியர்கள் பின்வரும் விபரங்களை சுயமாகத் தயாரித்து சங்கத்தின் ஊடாக அனுப்பி வைக்குமாறு சமாசம் கேட்டுள்ளது. அவ்விபரம் வருமாறு,

சங்கத்தின் பெயர், முன்பள்ளியின் பெயர், ஆசிரியர் பெயர், வயது, கல்வித் தகைமை, விசேட கல்வித் தகைமை, தேசிய அடையாள அட்டை இலக்கம்.


# கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## எமது நிறுவனத்தின் நலநோக்கு சேவைகள்!

- உள்ளூர், வெளியூர் தொலைபேசிச் சேவை.
- கிராமிய வங்கிச் சேவை.
- பிளாஸ்டிக் மற்றும் இரும்புக் கதிரைகள் வாடகைச் சேவை.
- ஓய்வுபெற்ற உறுப்பினர்களுக்கான மாதாந்த ஓய்வூதியத்திட்டம்.
- உறுப்பினர்கள், பணியாளர்களுக்கான மரணக்கொடைத் திட்டம்.
- ஆண்டு ஒன்றிற்கு செல்லும் முன்பள்ளி மாணவர்களுக்கான பாடசாலை உபகரணம் வழங்கல்.
- உறுப்பினர், பணியாளருக்கான பந்தல் சேவை.
- கிராமிய வங்கியின் சிறுவர் சேமிப்பாளருக்கான பரிசில் வழங்கல்.
- முன்பள்ளி நிலையங்களை நிறுவி நடாத்துதல்.
- முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வேதனம் வழங்கல்.
- உறுப்பினர், பணியாளர் பிள்ளைகளுக்கு சுழற்சி முறையில் வருடாந்தம் நிதிக் கொடை வழங்கல்.
- உறுப்பினர், பணியாளர் பிள்ளைகளுள் ஆண்டு 5 புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த(சா/த), க.பொ.த(உ/த) ஆகியவற்றில் சித்தியடைந்தவர்களுக்கும் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்களுக்குமான ஊக்குவிப்பு நிதி வழங்கல்.
- உறுப்பினர், பணியாளர் மரணம் அல்லது நிரந்தரப் பாதிப்படைந்தால் அவர்களது கல்வி பயிலும் பிள்ளைகளில் ஒருவருக்கு கல்வியைத் தொடர்வதற்கான மாதாந்த உதவு தொகை நிதி வழங்கல்.
- முன்பள்ளி மாணவர்களுக்கான தகுதிகாண் பரீட்சை மற்றும் அவர்களுடைய விளையாட்டுப் போட்டிகளை நடத்தி பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கல்.
- உறுப்பினர், பணியாளர், மகளிர்குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு காலத்துக்கு காலம் தொழில்சார் பயிற்சிகளை வழங்குதல்.
- வருடந்தோறும் சிறந்த உறுப்பினர், பணியாளரைத் தெரிவு செய்து கௌரவித்தல்.
- உறுப்பினர், பணியாளர்களுக்கு இலவச கண்பரிசோதனையை மேற்கொண்டு மூக்குக் கண்ணாடி வழங்கல்.
- வருடந்தோறும் கூட்டுறவுதின நிகழ்வுகளின்போது பணியாளர்கள், உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் ஒன்றிணைந்து தொழில்சார் மற்றும் அறிவுசார் போட்டிகளை நடத்தி பரிசில்கள் வழங்குதல்.

## உற்பத்தி செயற்பாடுகள்!

- பனை வெல்ல உற்பத்தி, விற்பனை.
- போத்தற் கள் உற்பத்தி, விற்பனை.

கே.கே.எஸ்.வீதி, தாவடிச் சந்தி, கோண்டாவில். தொ.பே: 021 222 3539


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2010ம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது.